குறள் மலர்

திருக்குறள் விளக்கம்

மாலை-1 | பராபவ; சித்திரை-வைகாசி | மலர்-9

௯. விருந்தோம்பல்.

1 இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)

2. 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'. (82)

3. 'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று'. (83)

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். (84)

5. 'வித்தும் இடல் வேண்டும்கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'. (85)

6. 'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு' (86)

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (87)

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (88)

9. 'உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.' (89)

10. 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' (90)

திருக்குறள் வாழ்த்து.

"சாதியைக் குறித்துத் தனிவிதி சொலாமல்
சமம்என மக்களைக் கருதி
ஓதிய அறமும், அறவழி ஈட்டும்
ஒளிதரு நற்பொருள் பகையும்,
பேதம்இல் இருவர் காதலால் ஒன்றிப்
பேணுறும் ஐந்திணை இன்பும்,
தீதறும் வகையால் உரைத்திடும்—எமது
திருக்குறள் உலகெலாம் வாழ்க.!"

—அடிகளாசிரியன் (சான்றாண்மை)

உய்திடுவார் குறளை உண்டு!

உலகோர்க்குத் திலகமென அள்ளித்தந்து—இணை
இல்லாத ஈரடியில் சொல்லிவந்து
விளக்காக வீட்டிற்கே குறளைத்தந்தான்—உலகுக்கோ
நிலவாகப் பொருளை ஈந்தான்

முப்பாலில் செப்பிவிட்டான் முழுமையாக—இன்று
முழுஉலகம் செப்பிடவே செழுமையாக
தப்பாது தரம்வாரி பிரித்துச் சொல்லி—உயர்
ஒப்பவே செந்தமிழில் கொடுத்தான் அள்ளி

இருவரியில் பெரும்பொருளை உள்ளடக்கி—வாழை
இலைமீது இமயமெனச் சொல்லடக்கி
உருவான திருக்குறளின் மேன்மைகண்டு—இந்த
உலகோரும் உய்திடுவார் குறளைஉண்டு!

—கெடுங்கூர், மா. சின்னசாமி,
ஈரோடு.

ஆசிரியர் குறிப்பு:

வள்ளுவத்தின் மெய்ப்பொருளை உணர்வோம்.

விண்ணில் புகழ்தாக்கும் வியன்சொல் வள்ளுவர் பெருமானின் விழா இவ்வைகாசித்திங்கள் 20-ஆம் நாள் (2-6-1966) கொண்டாடப் படுதல் சிறப்புடைத்தாகும். இந்நாளை பொய்யா மொழிப் பொதுமறை புகன்ற அப்பெருமகனுரின் நினைவு நாளகக் கொண்டாடும் எண்ணம் இத்துணை காலங்கடந்தேனும் தமிழனுக்கு ஏற்பட்டது குறித்துமகிழ்ச்சி யடைய இடமில்லை யெனினும், ஆறுதலாவது அடையலாம்.

வள்ளுவர் பேராசானை நாம் நினைத்து வணங்கிப் போற்றிப் புகழ் கிற போதில் நாம் நம்மனதில் திண்ணமாய் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியது ஒன்றுண்டு.

குறள் அறநெறி யாத்த அக்கோமானின் படத்திற்கும் சிலைக்கும் மாலையிட்டுப் பூசனை புரிந்து வணங்குவது மட்டும் வள்ளுவன் வழியா டாகாது. இதனை அப்பேரருளாளன் நம்மிடம் எதிர்பார்த்திருக்கவும் மாட்டார். வள்ளுவர் விழா கொண்டாடும் இந்நாளில் அவரது திக் கெட்டும் முட்டும் திருக்குறளை, வீதிகளிலும் பொது மேடைகளிலும் முழங்கினுல் மட்டும் போதாது; ஏடுகளில் புகழ்ந்து புகழ்ந்து வியந்து வியந்து எழுதிக் குவித்தால் மட்டிலும் போதாது; கிளிப்பிள்ளைகள் போன்று குறட்பாக்களை ஒப்புவித்தல் மட்டிலும் போதாது. அப்பெரும கனுரின் உள்ளத்தை உள்ளவாறு உணர நாம் இந்நாளில் முயலல் வேண்டும்.

ஒருவரின் உள்ளத்தை உணர்ந்தால் மட்டிலுமே அவரது சொல்லின் மெய்ப்பொருள் விளங்கும். வெறும் சொற்பொருளை மட்டும் கண்டால் போதாது; அச்சொல்லின் உட்பொருளாய மெய்ப்பொருளையும் காண வேண்டும் இதனை வள்ளுவர் பெருமானே "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு "(குறள் 365) என்றும், "எப்பொருள் யார்யார் வாய்ச் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு "(குறள் 423) என்றும் கூறியி ருப்பக் காண்கிறோம். திருக்குறளின் மெய்ப்பொருளை அறிதற்குத் திருவள்ளுவரின் உள்ளத்தை நாம் ஓரளவேனும் உய்த்தறிந்து கொள் ளல் அவசியமாகும்.

பொய்யாமொழித் திருக்குறளைப் பொதுமறை என்று போற்றுகின்றோம். பொதுமை அறத்தினை வள்ளுவர் போதித்தாரென்று மட்டும் கொள்ளுதல் சரியன்று; உண்மையில், ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்கேற்பத் தனியறங் கூறுகின்றார் வள்ளுவர். தனிஒருமனிதன் மனம் செம்மைப் படாவிடத்து, பொதுப்படப் பேசியதாகக் கொள்ளும் கருத்து ஒருவருக்கும் பயன்படாதொழியும் வள்ளுவத்தின் தனித்தன்மை யாது? "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" (குறள் 34) என்பதுவே அது. அப்பெருமகன் சுட்டும் நெறி நாம் கூறும் புறப் புதுமையன்று; தனி நெஞ்சத் தூய்மையே குறள் காட்டும் நெறியாம். ஒவ்வொரு தனித் தனி மனிதனின் நெஞ்சில் வஞ்சனை துடைத்து நெஞ்சத்தூய்மை கொள்ளச் செய்வதே வள்ளுவம்எனத் தெளிதல் வேண்டும். அப்போது தான், தனித்தனி ஒவ்வொருவனும் திருந்துவான்; அவ்வளவில். அம் மாதிரிப்பலபலதனி மனிதர்களைக்கொண்ட பொதுச்சமூகமும் திருந்தும்.

தனி மனிதனின் நெஞ்சத்தைத் தொட்டு-தன் நெஞ்சத்தோடு ஊடாடவிட்டு, தனிமனித நெஞ்சில் அறவுரை ஊன்றி-அவ்வளவில், அது பொதுமறையாக இலங்கச் செய்திருக்கின்றார் வள்ளுவப் பெருந் தகை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் போதித்தநெறியே குறள் நெறியாம். வள்ளுவர் நாளைக் கொண்டாடும் இந்நாளில், வள்ளுவர் நெஞ்சோடு நம் நெஞ்சை ஊடாட விட்டு அப்பெருமானின் உள்ளுணர்வு கண்டு, அதன் படி அம்மெய்ப் பொருளை மக்களிடை பரப்பி, ஒவ்வொரு தனிமனிதனும் அகத்தூய்மை கொண்டு குறள் நெறி நிற்கத் தூண்டுதலே வள்ளுவர் பெருமானுக்கு இன்று நாம் செய்யத்தக்க மெய்வழிபாடாம். குறள் பரவினால் போதாது; குறள் அறம் பரவுதல் வேண்டும்.

நன்றி.

"விருந்தோம்பல்"-என்னும் இவ்வொன்பதாம் அதிகாரக் குறட் பாக்களுக்கு அறிஞர் பதின்மர் தந்துள்ள தெளிவுரை படிப்போர்க்கு நல் விருந்தாம். அவர்களுக்கு நம் நன்றி.

இருந்தோம்பி...

கவியோகி. சுத்தானந்த பாரதியார்,
அடையாறு. சென்னை.

இல்வாழ்வு எதற்கு?

குறள்-1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)

[பரிமேலழகர் உரை:- அஃதாவது, இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலன் ஆகாதாரை நினைந்து செய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கு ஈதலன்மையானும் இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின் பின் வைக்கப்பட்டது. ஆ-ர்.]

சொற்பொருள்:- இருந்து=ஒரு வீட்டில் நிலைத்திருந்து; ஓம்பி= கடமை காத்து; இல் + வாழ்வது + எல்லாம்= இல்லறத்தில் மனைவி மக்களுடன் முறையாக வாழ்வதெல்லாம்; விருந்து ஓம்பி=வந்த விருந்தினரை வரவேற்று. மரியாதை செய்து பசியாற்றி; வேளாண்மை செய்தல் + பொருட்டு= அன்பும் அறமும் பண்பும் பயனுங் கொண்டு ஈந்து உவத்தலுக்கேயாம்.

ஈந்துவக்கும் இன்பமே இன்பம்; பகுத்து ஈந்துண்ணும் பண்பே பண்பு; அதுவே வேளாண்மை. உழைத்து விளைத்ததைப் பகுத்துப் புசித்தல்; ஈகையும் கையுமாக வாழ்தல். தாளாண்மையால், முயற்சியால் வந்த பொருளை வேளாண்மையால் விருந்தோம்பி மகிழ்வது இல்லறத்தார் கடமை. அன்பும் அறமும், இல்லறத்தின் பண்பும் பயனுமாகும். வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான். மருந்தோடாயினும் விருந்தோடுண்க.

அப்பூதியடிகள் அப்பருக்கு விருந்திட்டதும், இளையான்குடி மாற நாயனார் சிவயோகிக்கு விருந்திட்டதும் நினைக.

To tend the guest and be hospitable is the sole aim of, setting up home and family. ★

விருந்து புறத்ததா...

பேராசிரியர்; வ. பெருமாள் எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ எஸ்;
தமிழ்ப் பேராசிரியர் முதல்நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

குறள்-2. 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'. (82)

[பரிமேலழகர்:- சாவா மருந்து எனினும்-உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினும், விருந்து புறத்ததாத் தான் உண்டல்—தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல், வேண்டற் பாற்று அன்று—விரும்புதன் முறைமையுடைத்து அன்று.

சாவாமருந்து-சாவாமைக்குக் காரணமாகிய மருந்து, விருந்து இன்றியே ஒருகால் தான் உண்டலும் சாவா மருந்தென்பார் உளராயினும், அதனை யொழிக என்றுரைப்பினும் அமையும். இவை இரண்டு பாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது. — ஆர்]

கருத்து:- சாக்காட்டைப் போக்கும் மிகச்சிறந்த அமிழ்தமாயினும் வந்த விருந்தினர் வீட்டின் முன்புறத்தில் இருக்கத் தான் மட்டும் உண்பது நல்லதன்று.

விளக்கம்;- இயற்கையின் பேரருளால் மழை பெய்கின்றது. மழையின் நற்பயனும் உணவு தானியங்கள் நன்கு செழித்து விளைகின்றன. இயற்கையின் பேரருள் உலகத்திற்குப் பொதுவானது எனவே, அப்பேரருளின் நற்பயனாகிய உணவும் உலகத்திற்குப் பொதுவானதே எல்லோர்க்கும் உரியஉணவைத் தன்னலஉணர்வு மிகுதியால் மறைத்து வைப்பது பெருந்தவறு தானே உண்பது இயற்கை விதிக்கு முரணானது. எனவே, பெற்ற உணவை வீட்டிற்கு வந்த விருந்தினருடன் பகிர்ந்து உண்பதே சிறந்த பண்பாகும். ''உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்'' என்னும் முதுமொழி மனிதப்பண்பாட்டின் உயர்ந்த நிலையை விளக்குகின்றது. பகுத்துண்டு வாழ்கின்ற காக்கை இப்பழமொழிக்குத் தக்க எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பகுத்துண்டு எல்லா உயிர்களையும் காப்பாற்றும் நற்செயலே பேரறமாகும் (குறள் 322).

'விருந்து' என்னும் சொல் புதுமையை (புதியவர்) குறிக்கும் நண்பரையும் சுற்றத்தாரையும் உபசரித்தல் பொது அறம். முன்பின் தெரியாத புதியவர்களை அகம் மகிழ முகமலர வரவேற்று உபசரிப்பதே சிறப்பறமாகும். விருந்தினருடன் உண்ணும்போது தன்னலம் மறந்து பொது

[பக்கம் எட்டில் காண்க]

வரு விருந்து...

புலவர், இரா. சாரங்கபாணி, எம். ஏ; எம். லிட்,
தமிழ்ப் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

குறள்-3. 'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று'. (83)

[பரிமேலழகர்:- வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை= தன்னை நோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை; பருவந்து பாழ்படுதல் இன்று=நல்குரவான் வருந்திக் கெடுதல் இல்லை.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற் பொருள் தொலையாது மேன்மேற் கிளைக்கும் என்பதாம்—ஆ-ர்]

கருத்து:- நாள்தோறும் விருந்தோம்புவார்க்குக் கேடு வராது

விளக்கம்:- மக்களின் வாழ்க்கைப்பயன் பிற உயிர்களுக்கு ஒல்லும் வகையில் உதவி செய்து, அவற்றின் துன்பத்தைத் துடைத்தலேயாகும். எல்லாத் துன்பத்தினும் பசித்துன்பம் மிகக் கொடிது. "இன்மையின் இன்னாதது யாதெனின்" என வினவி விடையிறுக்கவந்த வள்ளுவப் பேராசான் அதற்கு ஒப்புமையான பிறிதொன்று காணாமையின், "இன்மையே இன்னாதது" என வற்புறுத்தல் காணலாம். "ஆற்றுவார் ஆற்றல் பசி யாற்றல்" என்பதனாலும் பசிக்கொடுமை புலனாகும் இப்பசிக் கொடுமையைப் போக்கும் ஈதலறத்தைப் பல அதிகாரங்களில் ஆங்காங்கே வற்புறுத்தியதோடு 'ஈகை' எனத் தனித்து ஓர் அதிகாரமும் ஆசிரியர் கூறியுள்ளார். அதனோடு அமையாது மக்களுக்கு இன்றியமையாது வேண்டும் அறிவுப் பேற்றினைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் பல அதிகாரங்களால் வலியுறுத்தியது போல, ஒப்புரவறிதல், விருந்தோம்பல் என்னும் அதிகாரங்களால் ஈதலறத்தைப் பன்முறையும் வற்புறுத்துவர்.

விருந்து—என்பது, இப்பொழுது, சுற்றத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், திருக்குறள் காலத்தே, முன்பின் பழக்கமில்லாத புதியவர்களைக் குறித்தது. விருந்து வேறு, சுற்றம்வேறு என்பது:

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை." (43)

[பக்கம் எட்டில் காண்க]

[பக்கம் ஏழின் தொடர்ச்சி]

என்னும் குறளால் அறியலாம். இங்கு, விருந்து – புதியவர்களேயும், ஒக்கல் – சுற்றத்தினரையும்குறிக்கும். இக்காலம் போலப் பண்டு உணவு விடுதிகள் இல்லாததால், கையில் பொருளிருப்பினும் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளுதல் அரிது. ஆதலால், புதியராகவரும் விருந்தினர்க்கு உணவு தந்து ஓம்புதல் பழைய காலத்துப் பேரறமாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு நாளும் விருந்தினரை ஓம்பினல் செல்வமெல்லாம் தீர்ந்து வறியராக நேருமே என நினைவார்க்கு விடை கூறுவதுபோல இக்குறள் அமைந்துள்ளது. இறைக்கின்ற கிணறு ஊறுவது போலப் பிறருக்கு வழங்க வழங்கப் பொருள் பெருகும் என்பதை இக்குறள் குறிப்பிற் புலப் படுத்துகிறது. அதனுல்தான், விருந்தோம்புவான் வாழ்க்கை 'பாழ்படுதலின்று' என்று ஆசிரியர் கூறியுள்ளார். விருந்தோம்புவானுக்குச் செல்வம் பெருகும் என்பதை, ''அகனமர்ந்து செய்யாள் உறையும்'' என்ற, அடுத்த குறளால் விளக்குவர்.

பருவரல் என்பது பருவந்து என வினையெச்சமாக வந்துள்ளது. இது, அலமரல், தெருமரல் போன்ற சொற்களை ஒத்ததாகும்; துன்பம் என்னும் பொருள்படும். இதனை ஒரு சொல்லாகவே கொண்டு பொருள் உரைத்தல் வேண்டும். பரு+வந்து எனப் பிரித்துப் பொருளுரைத்தல் பொருந்தாது.

The family of the man that daily entertains the guests who come to him shall not be laid waste by poverty. (Rev, D. J. L.) ★

[பக்கம் ஆறின் தொடர்ச்சி]

நலம் மலர்கின்றது. குறுகிய உள்ளம் விரிவடைகின்றது. 'நான்' என்ற அகப்பற்றும் 'எனது' என்ற புறப்பற்றும் நீங்குகின்றன. மனம் மகிழ்ச்சி அடைகின்றது. வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஏற்படுகின்றது. 'எல்லாம் எல்லார்க்கும்' (Each for all and all for each) என்னும் பொதுநலக் கொள்கை உள்ளத்தில் ஆழமாக வேரூன்றுகின்றது. 'வாழ்வோம்; வாழவிடுவோம்' என்னும் உயர்ந்த நோக்கம்செயல் படுகின்றது.

எனவே, எவ்வளவு சிறந்த அமுதமாயினும் தான்மட்டும் உண்ணுமல் விருந்தினருடன் உளங்கலந்து உண்பதே சிறந்தது; உயர்ந்தது; தகுதி வாய்ந்தது.

Were it even the draught of immortality, it shall not be tasted alone when the guest is in the hall. (V. V. S.) ★

அகனமர்ந்து...

டாக்டர், ச. வே. சுப்பிரமணியம், எம். ஏ; பி. எச். டி.
தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

குறள்-4 அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். (84)

[பரிமேலழகர்:- "செய்யாள் அகன் அமர்ந்து உறையும்-திருமகள் மனமகிழ்ந்து வாழா நிற்கும்; முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்-முகமினியனாய்த் தக்கவிருந்தினரைப் பேணுவானது இல்லின்கண்.

மனம் மகிழ்தற்குக் காரணம், தன் செல்வம் நல்வழிப்படுதல் தகுதி ஞானவொழுக்கங்களான் உயர்தல். பொருள் கிளைத்ததற்குக் காரணங் கூறியவாறு" - ஆ-ர்.]

பொருள்:- முகம் மலர்ந்து தக்க விருந்தினரைப் பாதுகாப்பவனுடைய இல்லில் மனம் மகிழ்ந்து திருமகள் நிரந்தரமாக என்றும் தங்குவாள்.

விளக்கம்:- அகத்தின் அழகை முகம் காட்டுவது இயல்பு. அகத்தில் அரும்பிய அன்பே முகமலர்ச்சியாக விரிகிறது. மோப்பக் குழையும் அனிச்ச மலரினும் மென்மை வாய்ந்த விருந்தினரைப் பேண முகமலர்ச்சி இன்றியமையாதது.

விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்று பொருள். புதியவர்களே விருந்தினர். தேவைமிக்க விருந்தினரே தக்க விருந்தினர். இன்று விருந்தினராகக் கருதப்படும் உற்றாரும் நண்பரும் பழகியோரும் விருந்தினர் ஆகார். இரக்கின்ற எளியவரே உண்மையான விருந்தினர். அவர்களே புதியோர். நமது உதவியை நாடி நிற்போர்; திரும்பக் கொடுக்க இயலாதார்.

இலன் என்னும் எவ்வம் உரையாது இத்தகையோரை ஓம்புதல் வேண்டும். இவரது தேவை முழுவதையும் வழங்கிப் பாதுகாக்க வேண்டும்.

நிழல்தரும் கனியுடை நன்மரம் போன்று, உறையுள் அளித்து உணவு கொடுக்கும் ஆற்றல் பெற்றது இல்லம்.

'மன்'-என்ற சொல் நிலைபேற்றைக் குறிப்பது. உடலம் அழிந்த பின்னும் அழியாதது ஆன்மா. ஆன்மாவின் ஆலயமே மனம். சிறு இன்பத்தாலும் புறம் மகிழலாம். ஆழ்ந்து நிலைபெற்ற இன்பத்தாலேயே மனம் மகிழும்.

[பக்கம் பதினொன்றில் காண்க]

வித்துல் இடம்...

வித்துவான், இரா. கிருஷ்ணமூர்த்தி,
நகராண்மை மகளிர் உயர்நிலைப்பள்ளி,
பொன்வயல்.

குறள்-5. 'வித்தும் இடல் வேண்டும்கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'. (85)

[பரிமேலழகர்:— "முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளை புலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா என்றவாறு"... ஆ-ர்]

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டு அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையாகும். அன்பின்றேல் வாழ்க்கை ஏது? வாழ்க்கை தொண்டு செய்ய அன்பு தேவை. விருந்தோம்புதல் சிறந்த தொண்டாகும். விருந்தினரைப் பரிமேலழகர் (43 ஆம் குறள் உரையில்) இருவகையாகப் பிரிக்கின்றார் பண்டறிவுண்மையின் குறித்து வந்தார் ஒரு வகையினர். அஃதின்மையின் குறியாது வந்தார் மற்றொரு வகையினர்.

இக்குறளை நோக்குங்கால், விருந்து ஓம்புவாரும் இருவகையினர் என உணரமுடிகிறது. தான் உண்ட பின்பு மிச்சிலான உணவை விருந்தினருக்குக் கொடுத்து உபசரிப்பவன் ஒருவகையினன்; விருந்தினரை உண்பித்து மிக்கதனைத் தான் உண்பான் பிறிதொரு வகையினன். இவ்விருவருள் பின்னவன் பெருமையைப் பேசுகிறது இக்குறள்.

விதையின்றியும் விருந்தோம்புவான் விளைபுலம் விளையும் எனப் பரிமேலழகர் பகர்ந்திருந்தாலும், விருந்தோம்புவான் விளைபுலம் நன்கு விளையும் என்பதே பொருள் எனக்கொள்ளத்தகும்.

தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்ததை எண்ணி வருந்தும் கண்ணகி "விருந்தெதிர் கோடல் இழந்த என்னை" என்று வருந்துவதையும், அன்பும் விருந்தோம்புதல் போன்ற பண்புகளும் உடைய பெண் பெய்யெனப் பெய்யும் பருவ மழைக்குச் சமமானவள் என்பதையும், அத்தகைய பத்தினிப் பெண்கள் உள்ள நாட்டில் வானம் பொய்க்காது; வளம் பிழைக்காது; கொற்றவன் கொற்றம் சிதையாது என்பதையும்,

"வானம் பொய்யாது, வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"

என்பதையும், இளங்கோவடிகள் கௌந்தியடிகள் வாக்கில் சிலம்பில் செப்புவதை அறியாதார் அறியாதாரே.

[பக்கம் பதினொன்றில் காண்க]

(பக்கம் ஒன்பதின் தொடர்ச்சி)

கண்டோர் கேட்டோர் விரும்புவது திரு. அழகுடைப் பொருட்கள் அனைத்துமே. திரு. அழகுடன் செல்வம் இணையும் போதே அது திருவாகின்றது. அத்தகைய செல்வ அழகின் செல்வியே திருமகள்.

நிலைபெறாத உலகில் நிலைபேற்றைத் தருவது கொடை ஒன்றுதான். அதையே மன்னு உலகத்து மன்னுதல் குறித்துத் தம்புகழ் நிறுவித் தாமாய்ந்தனரே என்றனர். ஐம்பெரும் வேள்விகளுள் சிறந்தது விருந்தோம்பும் வேள்வி. பிள்ளைகள் தம்பொருளைப் பிறரோடு பங்கிட்டு மகிழ்வதில் பெற்றோர் இன்பம் காண்பது போன்றே, விருந்தோம்பிப் பிறர் குறை நீக்கும்போது இறைவன் இன்புறுகின்றான். குறளின் நயம் 'செய்யாள் உறையும்' என்ற சொற்றொடரில் சுட்டப்படுகிறது. திருமகள் நிரந்தரமாகத் தங்கிவிடுவதால் வளம் குன்றாது பெருகுகின்றது. இறைக்கும் கிணறு ஊறும். அது போன்றே, கொடுக்கக் கொடுக்கச் செல்வம் குவியும். மட்டுமன்று, இவர்களது விருந்தோம்பும் பண்பு அகத்திலிருந்து துளிர்விட்டதாகையால் என்றும் நிலைபெறுவது. திருமகளும் என்றும் உறைகின்றாள்.

Lakshmi with joyous mind shall dwell in the house of that man who, with cheerful countenance, entertains the good as guests: (Rev Drew. J, Lazarus) ★

(பக்கம் பத்தின் தொடர்ச்சி)

இளையான்குடிமாறனார் விருந்தினரை உபசரித்த பெருமையை உலகம் அறியும். கொடுக்கக் கொடுக்கக் குறையாது மாறனார் நிலம் நன்கு விளைந்ததைச் சேக்கிழார் செப்பியுள்ளார்.

எவ்வாறு, கடல் நீர் மழை நீராகவும், மழை நீர் கடல் நீராகவும் மாறிமாறி உறுப்பெருகிறதோ, அதுபோலவே விருந்தோம்புதலால் மழையும், மழையால் விருந்தோம்புதலும் உலகில் நடைபெறுகின்றன என உய்த்துணர வைக்கிறார் பொய்யா மொழியார். இக்குறள் மூலம் வள்ளுவர் வான்சிறப்பு, இல்வாழ்க்கை, அன்புடைமை போன்ற அதிகாரக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் நாம் உய்த்துணர் வைப்பது ஊன்றி நோக்கற்பாலது.

அசோக வனத்தில் சீதை "விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்" என்னும் தொடரும், குசேலோபாக்கியானத்தில், சுசீலை தன் கணவன் கொணர்ந்த நீவாரப் புல்லரிசிச் சோற்றை "அதிதிக்கோர் பாகம் வைத்து" மிகுந்ததையே கணவனுக்கும் குழந்தைகளுக்கும் கொடுத்தாள் என வருவதும் ஈண்டு எண்ணி உணரத்தக்கதாம்.

Does the field of one who partakes of what remains after entertaining the guest, need to be sown with seeds? _(V. R. R.) ★

செல்விருந் தோம்பி...

நெல்லைகிழான்;
மணிமன்றத் திறைவனூர்.

குறள்-6. 'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு' (86)

[பரிமேலழகர்:- செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்—தன்கட் சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத்தான் அதனோடு உண்ண இருப்பான்; வானத்தவர்க்கு நல்விருந்து—மறுபிறப்பில் தேவனாய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம்.

வருவிருந்தென்பது இடவழுவமைதி நல்விருந்து—எய்தா விருந்து. இதனால் மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது - ஆ-ர்]

''மருந்தே யாயினும் விருந்தோடுண்க''என்பது பழமொழி. இங்கே, மருந்து என்பதற்கு அருமருந்தாகிய அமிர்தம் எனினும் சரி; அன்றி, தமிழகத்தின் சில மாவட்டங்களிலே கூறப்படுவது போன்று, 'உயிர் போகாக் கஞ்சி' எனினும் சரி; பொருந்தும். இதைச் ''சாவா மருந்து'' என வள்ளுவர் இதோ அதிகாரத்தின் இரண்டாவது குறளிலே குறித்துள்ளார். தன் உயிர் உடலைவிட்டுப் போய்விடாதபடி காக்கும் அளவிற்குமட்டுமே அவசியமான அத்துணைக் குறைந்த அளவு கஞ்சியே தன்னிடம் இருப்பினும், விருந்து வந்தக்கால் அதையும் விருந்தினரோடு பகிர்ந்துண்ணல் வேண்டும் என்றுகொள்வது மிகவும் நுண்ணிய உரையாம். அளவிற் சிறிய கஞ்சியிலிருந்து, அளவில் பெரிய அவ் விருந்தோம்புவானின் மனவிசாலம் பெறப்படுகிறது.

அப்படிப்பட்ட விசால மனமுடைய ஒருவன் மறுமையில் தேவர்க்கு நல்விருந்தினன் ஆவான் என்னும் மறுமைப் பயன் ஓர் புறமிருக்க, அதனால் அவனடையும் இம்மைப் பயனும் பெறப்படுகிறது. இத்தகைய விருந்தோம்பும் பண்புடையான் பின்னர், தன் கைப்பொருளைப் பறி கொடுத்து''பரிந்தோம்பிப் பற்றற்றேம்''-எனவருந்த மாட்டானல்லவா?

இனி; ''செல்விருந்து'' என்பதற்கு,-''தவம் செய்வதற்காகச் சாதகமாயிருக்கின்ற சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சிறிது உணவு தேவையானபடியால் அதைச் சிற்சில நாட்களுக்கு ஒருமுறை இல்லறத்தாரிடமிருந்து ஏற்று உண்பதற்காக அவர்கள் வசிக்கும் வீதியில் செல்லுகின்ற மகா முனிவர்கள் ஆவர்'' என்பது கவிராஜ பண்டிதர்

[பக்கம் பதிமூன்றில்காண்க]

இனைத்துணைத்...

திரு. வே. தில்லைநாயகம் எம். ஏ.
நூலகர், கன்னிமாரா பொது நூலகம்,
சென்னை-8.

குறள்-7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (87)

[பரிமேலழகர்:- வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை-விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இன்ன அளவிற்று என்பதோர் அளவுடைத்தன்று, விருந்தின் துணைத்துணை-அதற்கு அவ்விருந்தின் தகுதியளவே யளவு.

'ஐம்பெரு வேள்வியின் ஒன்றுகலின் வேள்வியென்றும் பொருள் அளவு' (நாலடி,38) தான் சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால்,வான் சிறிதாப் போர்த்துவிடும் ஆகலின், இனைத்துணைத்தென்பது ஒன்று இல்லை என்றும் கூறினார். இதனான் இருமையும் பயத்தற்குக் காரணம் கூறப்பட்டது. ஆ-ர்.]

(பக்கம் பதினான்கில் காண்க)

[பக்கம் பனிரெண்டின் தொடர்ச்சி]

ஜெகவீரபாண்டியனார் கருத்தாகும் —இம் முனிவர்களுக்கும் இது'உயிர் போகாக்கஞ்சி; விருந்தோம்புவானிடம் உள்ளதும் அவன் உயிர் போகாக் காக்கும கஞ்சி; அதை அவன் தான் உண்பதைவிட இம் முனிவர்களுக்கு அவர்கள் உயிர் போகாக் கஞ்சியாகத் தருவது மிகப் பொருத்தமுடைய தல்லவா?-மிக அரியதோர் இணைப்பு இது!

இன்னும், ''வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய''-புறம். 177-15.

''வருவிருந்தோம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர்'' —சிலம்பு. அழற்படு. 133.

''அருவிலையிற் பெறுங்காசும் அவையே யாகி
அமுதுசெய்யத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்கள் எல்லார்க்கும் வந்தாருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளாதாக,''
—பெரிய. திருஞான. 571.

என்பனவும் இவண் ஒப்பு நோக்கத் தக்கனவாம்.

Behold the man who hath tended the outgoing guest and waiteth for the in-Coming one;He is a welcome guest unto the gods, (V. V. S,) ★

(பக்கம் பதிமூன்றின் தொடர்ச்சி)

'விருந்து' என்ற சொல் 43, 81, 82, 83, 84, 85, 86, 87, 88 89, 90, 153, 1211, 1268 முதலிய 14 குறள்களிலும் 'ஓம்பல்' என்ற சொல் 43, 89, 390, 612, 642, 820, 1155 முதலிய 7 குலள்களிலும் வருகின்றன.

இதன்படி விருந்தோம்பல் என்றால் என்ன?

மனிதன் தன் வாழ்விலே செய்யும் செயல்கள் பலபல. அதில் பயன் கருதிச் செய்வன பல. பயன் கருதாது செய்வன சில. அதில் அறத்தின் பாற்படுவன மிகச்சில. அதில் முதலிடம் பெறுவது விருந்தோம்பல். அது எப்படி?

தனக்கு முன் பின் தெரியாத புதியவரானாலும் தன்னை நாடி ஒருவர் வந்துவிட்டால் அவரை முகங்கனிய வரவேற்று, அகங்கனிந்து உபசரித்து, அவர் மனம் நிறையச்செய்து. அதனைக்கண்டு நாம் மனம் நிறைவு பெறுவதுதான் விருந்தோம்பல்

எதற்கும் ஒரு அளவு உண்டு என்பர். அப்படியானால் விருந்தோம்பலுக்கும் அளவு உண்டா? நிச்சயமாக இல்லை. ஏன்?

நல்லது செய்வதற்கு-அறம் புரிதலுக்கு-விருந்துபேணலுக்கு-அளவு இல்லை. ஏன்? விருந்து கண்டொளிக்குந் திருந்தா வாழ்க்கை (புறம் 266) ஒரு வாழ்க்கையாகாது. ஆளறிந்து. காலமறிந்து, இடமறிந்து, தேவையறிந்து. செய்யும் விருந்தோம்பல் சாலப் பெருமையுறும். எப்படி?

"தான் சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடு" என்கிறது நாலடியார் (38).

"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பரம ஞானி பகலூண் பலத்திற்கு
நிகரில்லை என்பது நிச்சயந் தானே"

என்கிறார் திருமூலர்.

எனவே விருந்தாம் வேள்விப் பயன் அளவு ஒருவர் செய்யப்படும் விருந்தும், அதனை உண்ணும் விருந்துமாகிய இருவரின் தகுதி அளவினைப் பொருத்ததாம்.

The advantages of benevolence cannot be measured. The measure [of the virtue] of the guests [entertained] is the only measure. *

பரிந்தோம்பி...

வித்துவான், தண். கி. வெங்கடாசலம். எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்; தமிழ்த்துறைத் தலைவர்,
ஸெயிண்ட் ஜோசப் கல்லூரி. பெங்களூர்.

குறள்-8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (88)

[பரிமேலழகர் உரை:- பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர்- நிலையாப் பொருளை வருந்திக்காத்துப் பின் அதனை யிழந்து இது பொழுது யாம் பற்றுக்கோடிலமாயினேம் என்றிரங்குவர். விருந்து ஓம்பி வேள்வி தலைப்படா தார்-விருந்தினரை ஓம்பி வேள்விப் பயனையெய்தும் பொறியிலா தார்.

"ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்" (நாலடி, 280) ஆதலின் பரிந்தோம்பி என்றார். வேள்வி ஆகுபெயர்.].

கருத்து:- விருந்தோம்பாதார் வருந்த நேரும்.

விளக்கம்.- இல்லறம், துறவறம் இரண்டனுள் இல்லறமே இனியது; எளியது; சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும். அந்த இல்லறம் முழுமை அடைய வேண்டுமானால் விருந்து ஓம்புதல் தவறக் கூடாது. இல்லறத்தாரின் முதற்கடமையாகிய விருந்தோம்புதலின் சிறப்பையும், அதனால் விளையும் பல்வகை நலன்களையும் விளக்கிக் கூறிய பின்னர் வள்ளுவப் பெருந்தகையார் விருந்து ஓம்புதலை ஆற்ற இயலாது தவறிவிட்டால் விளையும் குறையினை நயமாக எடுத்துரைக் கின்றார்.

ஒருவர் தம் வாழ்நாள் முழுதும் அரும் பாடுபட்டுப் பொருள் ஈட்டு கின்றார். இன்னும் பெருமுயற்சி கொண்டு கண்ணுங் கருத்துமாய் அதனைப் பாதுகாத்து வருகின்றார். விருந்து போற்றுதலை அவர் புறக் கணித்து விட்டு விடுகிறார். ஒருநாள் தம் பொருள் முழுதையும் அவர் இழந்து விடல் நேர்கிறது. எவ்வளவோ முயன்றும் அப்பொருளை அவரால் பிடித்து நிலையாக வைத்துக்கொள்ள இயலவில்லை. பொருள் தான் நிலையற்றதாயிற்றே! அப்போது அவர், "அந்தோ! பொருள் இருந்த காலத்து அதனையே பெரிதாக எண்ணி விருந்தினரைப் போற் றாது விட்டேனே! இப்போது பொருளையும் இழந்தேன். எனக்குப் பற்றுக் கோடு, அல்லது துணையாக இருக்கத் தக்கவரையும் காணேன்! என் செய்வேன்? என்று வருந்துவர்.

[பக்கம் பதினாறில் காண்க]

உடைமையுள் இன்மை...

திரு. அ. தாமோதரன், எம்; ஏ.
தமிழ் ஆராய்ச்சித்துறை;
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

குறள்-9. 'உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.' (89)

பரிமேலழகர்:- "உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை = உடைமைக்காலத்து இன்மையாவது, விருந்தோம்பலை யிகழும் பேதைமை; மடவார்கண் உண்டு = அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது பேதையார் மாட்டே உளதாம்.

"உடைமை பொருளுடையனுந்தன்மை. பொருளால் கொள்ளும் பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக உபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலையிகழிற் பொருள் நின்றவழியும் அதனாற் பயனில்லை யென்பதாம். இவையிரண்டு பாட்டானும் விருந்தோம்பா வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது."—ஆ-ர்]

விருந்தோம்பலைப் போற்றிச் செய்யாத பேதைமை உடைமையுள் இன்மை; அது பேதையாரிடத்துக் காணப்பெறும்.

[பக்கம் பதினேழில் காண்க]

[பக்கம் பதினைந்தின் தொடர்ச்சி]

இவ்வாறு அன்றி, பரிந்துஓம்பி' என்பதற்கு 'வருந்தி விரதங்காத்து' எனப் பொருள் கொண்டு, பல்வகை விரதம்பேணித் தவம்புரியும் துறவியரைச்சுட்டி, அத்துறவியர் பற்று இழந்தும் பயன்பெறாத நிலையில் வாழ்பவர் எனக் கூறுவதும் ஒன்று. இது துறவுநிலையைக் குறைகூறுவதாகிவிடும். வள்ளுவர் கருத்து அவ்வாறு இருக்க முடியுமா என்பது வினா.

ஒல்லும் போது ஒல்லும் வகையில் விருந்து போற்றி மகிழ்தல் நன்றாம்.

Those who have taken no part in the benevolence of hospitality shall [atlength] lament saying "We have laboured and laid up wealh and are now without support" (R. D) ★

[பக்கம் பதினாறின் தொடர்ச்சி]

இனி, இல்லறத்தின் தன்மை விருந்து பேணல்; இதனைப் பேணாத பேதைமை பேதையாரிடத்து உண்டு எனவும் பொருள் கூறலாம்.

விருந்தோம்பாமை "உடைமையுள் இன்மை" என்றாலும், அது விருந்தோம்பாமையின் இழிவு கூறும் தொடர் என்பதையும், விருந்தோம்பாமை பேதையாரிடத்து உண்டு என்றாலும், அது விருந்து பேணாதார் அறிவிலார் என்று கூறும் தொடர் என்பதையும் கருதுதல் வேண்டும்.

எந்தக்குறிக்கோளும் உரியமுறையில் செயலாற்றப் பெற்றுப்பயன் படுதல் வேண்டும். இன்றேல் வெறுமையே எஞ்சும். இல்லறத்தின் பயன் விருந்தோம்பல்; செல்வத்தின் பயன் வேளாண்மை செய்தல்; அறிவின் பயன் உண்மை அறிதல். விருந்தோம்பாமை காரணமாக இம் மூன்றும் பயனுறவில்லையாதலின் வெறுமையே மீதி. "பொருளில் வறுமை; இல்லறத்தில் மாணாமை" என்பன "உடைமையுள் இன்மை" என்ற தொடராலும், "அறிவில் வெறுமை" என்பது "மடவார்" என்ற சொல்லாலும் குறிப்பிடப்பட்டுள்ளன. விருந்தோம்பாமை திருவள்ளுவர் கண்ணோட்டத்தில் "உடைமையுள் இன்மையும்", "இன்மையுள் இன்மையும்" (153) ஆகும்.

இக்குறளின் "உடைமையுள் இன்மை" என்ற தொடர் கருத்தாழம் நிறைந்தது என்பதோடன்றி வேறு சிறப்பும் உடையது. இது ஆசிரியரின் நடைப் பாங்கின் (Style) அறியவும், தொடரிலக்கண அமைப்பினை [Syntactic Structure] அறியவும் உதவும். இதனைப் போன்றே "இன்மையுள் இன்மை" (153, 841) "வன்மையுள் வன்மை' (153) "செல்வத்துள் செல்வம்" (241, 411), "இன்பத்துள் இன்பம்", "துன்பத்துள் துன்பம்" (629) என்று வேறு சில தொடர்களையும் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். இவை அவருடைய நடைப் பாங்கினை அறிய உதவுவன. நடைப் பாங்கு பற்றிய கருத்து அவரும் அறிந்த ஒன்று என்பதை "சொல்லின் நடை தெரிந்த நன்மையவர்" (712) என்ற தொடர் சுட்டும்.

இலக்கியத் துறையில் நடைப் பாங்கு பற்றிய ஆய்வு ஒரு குறிப்பிட்ட கால இலக்கிய நடையின் தன்மையைப் பாகுபடுத்தவும், ஒரு குறிப்பிட்ட இலக்கியப் பிரிவின் நடைப் பாங்கினை வேறுபடுத்தவும், ஆசிரியரின் தனித்தன்மையைக் கண்டுணரவும், இடைச் செறுகல்களைத் [Interpolation] தெளிவுபடுத்தவும், பாட வேறுபாடுகளை [Textual Variation] அறுதியிடவும் பயன்படுத்தப் படுகிறது. எனவே, அத்தகு ஆய்விற்கு இத்திருக்குறள் உதவக் கூடிய கருவூலம் என்பதை இக்குறளின் பொருள் ஆழத்தினை அறிந்தின்புறுவர் கருதுதல் வேண்டும்.

That stupidity which ixercises no hospitality is poverty in the midst of wealth (R, D) It is found in senceless morials, (M, S, P) ★

மோப்பக் குழையும்....

டாக்டர், வ. ஆ. தேவசேனுபதி எம்; ஏ; பிஎச். டி.
பேராசிரியர், தத்துவத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

குறள்-10. 'மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' (90)

[பரிமேலழகர் உரை:- அனிச்சம் மோப்பக் குழையும்-அனிச்சம் பூ மோந்துழியன்றிக் குழையாது;விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும்-விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்.

அனிச்சம் ஆகுபெயர். சேய்மைக்கட்கண்டுழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றாற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், தீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுன் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது-ஆ-ர்]

'விருந்தோம்பல்' என்னும் அதிகாரம் முழுவதுமே, உணவு பற்றுக் குறையும் பங்கீட்டு முறையும் நிலவும் இககாலத்துக்கு முற்றும் மாறுனதாகத் தோன்றலாம் எனினும், வளம் சுருங்கினும் மனம் சுருங்காதிருப்பதே நன்மக்களின் இயல்பாதலால் 'விருந்தோம்பல்' எக்காலத்துக்கும் பொருந்துவதாகும்.

விருந்தினர்களிடம் நடந்து கொள்வது எப்படி? என்னும் கேள்விக்கு விடைபோல அமைந்துள்ளது இக் குறள்.

மலர்களனைத்திலும் அனிச்சமே மென்மை மிக்கதாகக் கூறப்படுகிறது. ஆனால், அனிச்ச மலரும் தொட்டு, மோந்து பார்த்தால் தான் வாடுகிறது. விருந்தினரோ பார்த்தமட்டில் வாடிவிடுகின்றனர்—ஆம்; முகம் வேறுபட்டு, இன்முகம் காட்டாது அவர்களைப் பார்த்த அளவிலேயே அவர்கள் வாடிவிடுகின்றனர். விருந்தினர் திறத்தில் இல்லறத்தார் மேற்கொண்டொழுக வேண்டியவை மூன்று: (1) அவர்கள் வரும் போதே இன்முகத்துடன் அவர்களைப் பார்த்தல். (2) வந்தவுடன் இன்சொல் பேசி அவர்களை மகிழ்வித்தல். (3) இவ்விரண்டால் மகிழ்ச்சியடைந்த அவர்கள் சற்றே உடனுறைய இசைந்தால் அவர்களுக்கு ஆவன செய்தல்.

பிறர் உள்ளம் புண்படாதவாறு நடந்து கொள்பவரே நன்மக்கள் என்னும் கருத்தை வெளியிட்டார் மேனாட்டறிஞர் ஒருவர். நன்மக்களாக வாழ்வது, பிறரை வாழ்விப்பது நம்முடைய கடமையாகிறது

As the Anicham flower fades in smelling, so fades the feast when the face is turned away ★

எல்லோரும் படிக்க வேண்டிய

எங்கள் நூல்கள்.

சாலை இளந்திரையன்
கனகசவுந்தரி இளந்திரையன்

★

சாலை வெளியீடு

3362/1, கிறிஸ்டியன் காலனி, தில்லி - 5.

சாலை இளந்திரையன்

கவிதை நூல்கள்

இளந்திரையன் கவிதைகள்

1962 வெளியீடு. விலை ரூ. **3-25**

கிடைக்குமிடம்:

யுனிவர்சல் பப்ளிஷர்ஸ்,

155/156 அங்கப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.

★

அன்னை நீ ஆடவேண்டும்

1964 வெளியீடு. விலை ரூ. **3-00**.

★

சிலம்பின் சிறுநகை

1965 வெளியீடு. விலை ரூ. **1-50**.

இவை கிடைக்குமிடம்:

பாரி நிலையம்,

59 பிராட்வே, சென்னை-1.

★

கட்டுரை நூல்கள்

உலகம் ஒரு குடும்பம்

இரண்டாம் பதிப்பு 1965. விலை ரூ. **3-00**.

கிடைக்குமிடம்:

வள்ளுவர் பண்ணை,

19. இரண்டாவது மெயின்ரோடு சி. ஐ. டி. நகர், சென்னை-15

ஓர் வேண்டுகோள்.

தமிழன்பர்களே!

வணக்கம். நம் மொழியில் சிறந்த கருத்துக் கருவூலமாகவும் மக்கள் இலக்கியமாகவும் அமைந்திருப்பது பழமொழி. ஒவ்வொரு தமிழ்ப் பழமொழியும் நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தது என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது. எதுகை மோனை நயம்பட அமைந்த தமிழ்ப் பழமொழிகள் செவிக்கு இன்பம் நல்கி, சிந்தைக்கு விருந்தளித்தவண்ணமிருக்கின்றன. இத்தகைய பழமொழிகளில் அமைந்துள்ள ஆழ்ந்த கருத்துக்களை உலகத்திற்கு எடுத்துணர்த்த வேண்டியது தமிழர்தம் தலையாய கடமையாகும். கோலார் தங்கவயல் தமிழ்ப் பேராசிரியர், **திரு. வ. பெருமாள்** அவர்கள் இப்பெரு முயற்சியை மேற்கொண்டு, தமிழ்ப் பழமொழிகளை உலக மொழியாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளார்கள் என்பதை நாம் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம். அவர்தம் சீரிய முயற்சி வெற்றிபெற உங்கள் ஒத்துழைப்புத் தேவை என்பது சொல்லாமலே விளங்கும். 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் பழமொழிக்கேற்ப நீங்கள் அனைவரும் உங்களால் இயன்ற அளவிற்குத் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து அவர்கட்கு அனுப்பி உதவினால், அவர் மேற்கொண்டுள்ள தமிழ்த் தொண்டிற்குப் பெருந்துணை புரிந்தவர்கள் ஆவீர்கள். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பழமொழியும் ஆழ்ந்த நன்றியுடனும், பெருமகிழ்ச்சியுடனும் பெற்றுக் கொள்ளப்படும்.

பழமொழிகள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:-

பேராசிரியர், **வ. பெருமாள்,**
எம். ஏ. பி. டி; எம். ஆர். ஏ. எஸ்;
முதல்நிலைக் கல்லூரி. உரிகம்,
கோலார் தங்கவயல், [கே. ஜி. எஃப்.]
மைசூர் மாநிலம்.

ஆசிரியர் 'குறள் மலர்'

செந்தமிழ் அச்சகம் சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.